*2019 பிப்ரவரி 13]*

*என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**64—**

## கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***13829—திரு. கே.எஸ். விஜியகுமார்:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டத்தில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டத்தில் புதியதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார், இருக்கையில் இல்லை.*

*வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**65—**

## தொழில் பூங்கா

***7103—திரு. சு. புகழேந்தி:**

*மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஒன்றியத்தில் தொழில் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*